


# யோகாமிர்தம்

அமரர்.

## முத்துக்குமாரசுவாமி யோககுமாரன்

அவர்களின்

# நினைவு அஞ்சலி மலர்

**27.01.2004**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# நினைவுக் காணிக்கை

யாழ். கொழும்புத்துறை சிவயோக சுவாமிகளது

அடியார்களான கைதடி

திரு. செல்லப்பா முத்துக்குமாரசுவாமி,

திருமதி தெய்வநாயகி முத்துக்குமாரசுவாமி

ஆகியோரின் ஏகபுத்திரனும்

இலண்டன் "வால்தம்ஸ்ரோ"

ஸ்ரீ கற்பக விநாயகரின் சீரிய தொண்டனும்,

இலண்டன் "பாணட் சொலிற்றெயார் நிறுவனத்தின்"

முகாமைத்துவக் கணக்காளராகப் பணியாற்றியவரும்,

பணிவுமிக்க சமூக, சமய

சேவையாளனுமான தொண்டன்

## யோககுமாரன்

அவர்களின்

நினைவாக இம்மலர் காணிக்கையாக

மலர்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

நீ பேசுகின்றாய், மறைகின்றாய், [illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

இப்படிக்கு

[illegible]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தவத்திரு சிவயோக சுவாமிகள்

## மகா வாக்கியங்கள்

**ஒரு பொல்லாப்பும் இல்லை.**

**THERE IS NO EVIL.**

**நாம் அறியோம்.**

**WE KNOW NOT.**

**எப்பவோ முடிந்த காரியம்.**

**IT HAD BEEN DETERMINED AGES AGO.**

**முழுதும் உண்மை.**

**ALL IS TRUTH.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



# மார்க்கண்டு சுவாமிகள்

## அருள் மொழிகள்

வடதிசை காட்டுங் கருவியைப்போல் இருக்க வேண்டும்.

பிராணனை அடக்கி ஆளுதல் வேண்டும்.

உன்னை முழுதும் ஒப்புக் கொடுத்தால், நீ செய்வது யாவும் தியானமாய் விடும்.


பகலில் பார்க்க முடியாதபடியினால் நட்சத்திரங்களை இல்லை என்று சொல்ல முடியுமோ ? அது போல் எங்கள் ஒவ்வொருவரிடத்தும் உள்ள இருட்டை நீக்கிப் பார்த்தால் கடவுளிருக்கிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



சந்த சுவாமிகள்

# Words of Our Master

*Go deep and let, the body work.*
*Realise the Truth. The Truth is within. Dive deep within. Go inwards and find out the Truth. Go deep inside and work it out from within. Work it !*


*Truth is one. Sages describe it in various ways.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



அமரர்

# முத்துக்குமாரசுவாமி யோககுமாரன்

அன்னை மடியில் 22.05.1974

அரனடியில் 14.12.2003

## திதி வெண்பா

சிவயோக மாமுனிவர் சிந்தையிற் றோய்ந்த
தவயோக குமார சேயோன் - பவமறச்
சுவர்க்கப் பேறிற் சுபானுவின் கார்த்திகை
அபரபஞ்ச மியிலணைந் தான்.

- பாவாக்கம் : 'அநுவை நா'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

1. வேழமுகத்து விநாயகனைத் தொழ
வாழ்வு மிகுத்துவரும்.

2. வெள்ளைக் கொம்பன் ஐங்கரனைத் தொழ
துள்ளி ஓடும் தீவினைகளே.

3. திருமால் அறியாச் சேவடியால் என்
கருமால் அறுக்கும் கணபதி சரணம்

## தேவாரம்

புலனைந்தும் பொறிகலங்கி நெறிமயங்கி
யறிவழிந்திட் டைம்மேலுந்தி
அலமந்த போதாக வஞ்சேலென்
றருள்செய்வா னமருங்கோயில்
வலம்வந்த மடவார்க ணமாட
முழவதிர மழையென்றஞ்சிச்
சிலமந்தி யலமந்து மரமேறி
முகில்பார்க்குந் திருவையாறே

## திருவாசகம்

அம்மையே அப்பா ஒப்பிலா மணியே
அன்பினில் விளைந்தஆ ரமுதே
பொய்ம்மையே பெருக்கிப் பொழுதினைச் சுருக்கும்
புழுத்தலைப் புலையனேன் தனக்குச்
செம்மையே ஆய சிவபதம் அளித்த
செல்வமே சிவபெரு மானே
இம்மையே உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவிசைப்பா

நையாத மனத்தினனை நைவிப்பான் இத்தெருவே
ஐயாநீ உலாப்போந்த அன்றுமுதல் இன்றுவரை
கையாரத் தொழுதருவி கண்ணாரச் சொரிந்தாலும்
செய்யாயோ அருள் கோடைத் திரைலோக்கிய சுந்தரனே.

## திருப்பல்லாண்டு

சீருந் திருவும் பொலியச் சிவலோக நாயகன் சேவடிக்கீழ்
ஆரும் பெறாத அறிவு பெற்றேன் ; பெற்றதார் பெறுவாருலகில்
ஊரும் உலகுங் கழற உழறி உமைமண வாளனுக்காட்
பாரும் விசும்பும் அறியும் பரிசுநாம் பல்லாண்டு கூறுதுமே.

## திருப்புராணம்

நன்மைபெரு கருள்நெறியே வந்தணைந்து நல்லூரில்
மன்னுதிருத் தொண்டனார் வணங்கி மகிழ்ந்தெழும் பொழுதில்
"உன்னுடைய நினைப்பதனை முடிக்கின்றோம்" என்றவர் தம்
சென்னிமிசைப் பாதமலர் சூட்டினான் சிவபெருமான்.

## திருப்புகழ்

இறவாமற் பிறவாமல் எனையாள் சற்குருவாகி
பிறவாகித் திறமான பெருவாழ்வைத் தருவாயே
குறமாதைப் புணர்வோனே குகனேசற் குமரேசா
கறையானைக் கிளையோனே கதிர்காமப் பெருமாளே.

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவயோக சுவாமிகளின்
# நற் சிந்தனை

## சிவனடிக்கன்புசெய் அனைத்துஞ் சிவமே

| | | |
|---|---|---|
| சிவனடிக் கன்பு | செய்குவர் | பெரியர் |
| சிவனடிக் கன்பு | செய்கிலர் | சிறியர் |
| சிவனடிக் கன்பு | சிறப்பினை | யளிக்கும் |
| சிவனடிக் கன்பு | சீவன் | முத்தியே |
| சிவனடிக் கன்பு | தீவினை | யொழிக்கும் |
| சிவனடிக் கன்பு | தெளிவினை | யளிக்கும் |
| சிவனடிக் கன்பு | சித்தங் | களிக்கும் |
| சிவனடிக் கன்பு | சின்மய | மாக்குமே |
| சிவனடிக் கன்பு | செய்பவம் | போக்கும் |
| சிவனடிக் கன்பு | திருவரு | ளாக்கும் |
| சிவனடிக் கன்பு | சிவகதி | யாக்கும் |
| சிவனடிக் கன்பு | செப்புந் | தகைத்தோ |
| சிவனடிக் கன்பே | சிவயோக | மாகும் |
| சிவனடிக் கன்பே | சிவஞான | மாகும் |
| சிவனடிக் கன்பே | சிவபோக | மாகும் |
| சிவனடிக் கன்பே | சிவமய | மாமே |
| சிவனடிக் கன்புசெய் | தேகம் | பொன்மயம் |
| சிவனடிக் கன்புசெய் | தேகஞ் | சின்மயம் |
| சிவனடிக் கன்புசெய் | தேகம் | நம்வயம் |
| சிவனடிக் கன்புசெய் | தேகஞ் | சிவமயம் |
| சிவனடிக் கன்பு | திரிகால | மறியும் |
| சிவனடிக் கன்பு | திரிலோக | மறியும் |
| சிவனடிக் கன்பு | திரிமூர்த்தி | யறியும் |
| சிவனடிக் கன்பு | திரிதோஷ | மிறக்குமே |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவனடிக் கன்புசெய் திருசிய மிறக்கும்
சிவனடிக் கன்புசெய் திருக்குப் பிறக்கும்
சிவனடிக் கன்புசெய் திரிகுண மிறக்கும்
சிவனடிக் கன்புசெய் சித்தந்தித் திக்குமே.

சிவனடிக் கன்புசெய் தேவரும் இல்லை
சிவனடிக் கன்புசெய் சீவரும் இல்லை
சிவனடிக் கன்புசெய் சித்தரும் இல்லை
சிவனடிக் கன்புசெய் அனைத்துஞ் சிவமே.

## முத்திக்கு வழி

### ஆசிரியப்பா

முத்திக்கு வழியை மொழியக் கேண்மோ!
சத்தியம் பொறுமை சாந்த மடக்கம்
நித்தயா நித்திய வத்து விவேகம்
பத்திசெ யடியரைப் பணிதல் பகலவன்
எழுமுன் எழுதல் இரும்புன லாடல்
வழுவிலைந் தெழுத்தும் வரன்முறை பயிலல்
குருபதம் பணிதல் கோலநீ றணிதல்
வரும்பசிக் குண்ணல் வாயுற வாழ்த்தல்
சாத்திரம் பயிறல், தன்போற் பிறரையும்
பார்த்தல்; பணப்பற் றொழித்தல்; பண்புடன்
வார்த்தை யாடல் வாதனை தீர்த்தல்
கோத்திரங் குலமெனுங் கோட்பா டொழித்தல்
எட்டுணை யேனும்
வேண்டுதல் வேண்டாமை யின்றி யென்றும்
ஆண்டவ னடிக்கீ ழமர்ந்து வாழ்தலே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவதொண்டு செய்வார்கள் தெய்வமே போல்வார்

சிவதொண்டு செய்வார்க்குச் செல்வமுண்டு கல்வியுண்டு
சிவதொண்டு செய்வார்க்குச் சீருமுண்டு பேருமுண்டு
சிவதொண்டு செய்வார்க்குச் சிந்தைத் தெளிவுமுண்டு
சிவதொண்டு செய்வார்கள் சேருவரோ தீநெறியில்

சிவதொண்டு செய்வார்கள் திசையெட்டு மாளுவார்
சிவதொண்டு செய்வார்கள் சென்மமல நீங்குவார்
சிவதொண்டு செய்வார்கள் தேவரையு மேவல் கொள்வார்
சிவதொண்டு செய்வார்கள் செத்துப் பிறவார்கள்

சிவதொண்டு செய்து திருமா லுலகாண்டான்
சிவதொண்டு செய்துதிரு வாரூரன் சிவமானன்
சிவதொண்டு செய்தரசன் சேர்ந்தான் கழல்முன்னாள்
சிவதொண்டு செய்வார்க்கு முண்டோ குறைசொல்வாய்

சிவதொண்டு செய்வார்க்குச் சினமில்லை அச்சமில்லை
சிவதொண்டு செய்வார்க்குத் தீயவகங் காரமில்லை
சிவதொண்டு செய்வார்க் கிரவும் பகலுமில்லை
சிவதொண்டு செய்வார்குப் பழியு, னுணவுமில்லை

சிவதொண்டு செய்வார்க்குச் சாந்தம் பொறுமையுண்டு
சிவதொண்டு செய்வார்க்குத் திரிகால வுணர்ச்சியுண்டு
சிவதொண்டு செய்வார்க்குத் தீயபிணி நோயில்லை
சிவதொண்டு செய்வார்கள் தெய்வமே போல்வார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# THOSE WHO DO SIVATHONDU

Those who do Sivathondu will attain both wealth and learning.
Those who do Sivathondu will win prosperity and fame.
Those who do Sivathondu will have minds made clear and lucid.
Will those who do Sivathondu follow any wrongful path?

Those who do Sivathondu will be lords of all creation.
Those who do Sivathondu will escape the taint of birth.
Those who do Sivathondu will make the gods their servants.
Those who do Sivathondu will not be born again.

By doing Sivathondu the world did Vishnu govern.
By doing Sivathondu Sundarar became the Lord.
By doing Sivathondu His feet were gained by Appar
For those who do Sivathondu can there be any want?

Those who do Sivathondu have neither fear nor anger.
Those who do Sivathondu are without the wicked 'I'.
Those who do Sivathondu know neither night nor day-time.
Those who do Sivathondu will not live on sinful food.

Those who do Sivathondu will be blessed with peace and patience.
Those who do Sivathondu will fathom threefold time.
Those who do Sivathondu will not suffer pain or sickness.
Those who do Sivathondu like gods will surely be.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆன்மா நித்தியம்

ஆன்மா நித்தியம் ஆன பொருளென
ஆசான் சொல்லக் கேட்டிருந்தோம்
அதையே மறந்தோம் பிறந்தோம் இனிநாம்
அதுவே நாமென எண்ணிடுவோம்

அநுதினம் சாதனை செய்யச் செய்ய
ஆனந்த மான மோட்ச வீட்டை
அடைவோம் இதிலோர் ஐயமும் இல்லை - ஆனால்
அடக்கமும் பொறுமையும் வேண்டுதுமே

குழந்தை யன்பொடு குருவின் பாதத்தைக்
கும்பிடும் பாக்கியம் உண்டானால்
கோடா கோடி பாவத்தைப் போக்கும்
நாட்டத்தைச் சிவத்தில் வைப்போமே

கௌரியை யிடத்தில் வைத்தவன் பாதம்
கைதொழும் அடியார்கள்
காலனை வென்று ஞாலந் தன்னில்
கவலையை நீங்கி வாழ்வாரே

## எல்லாஞ் சிவமே

அப்பனும் அம்மையுஞ் சிவமே அரிய சகோதரருஞ் சிவமே
ஒப்பில் மனைவியுஞ் சிவமே ஓதரும் மைந்தருஞ் சிவமே
செப்பில் அரசருஞ் சிவமே தேவாதி தேவருஞ் சிவமே
இப்புவி யெல்லாஞ் சிவமே என்னை யாண்டதுஞ் சிவமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அத்துவிதப் பொருள் காப்பாம்

அத்துவி தப்பொருள் காப்பாம் - எனக்
கடியார்க ளென்றென்றுங் காப்பாம்
சித்தருந் தேவருங் காப்பாம் - என்றன்
சித்தத் திலங்குந் திருவருள் காப்பாம் (அத்து)

அட்ட வசுக்களுங் காப்பாம் - எனக்
கானந்த மான பராபரன் காப்பாம்
எட்டுத் திசைகளுங் காப்பாம் - எனக்
கெங்கும் நிறைந்த சிவசக்தி காப்பாம் (அத்து)

பிராண னபானனுங் காப்பாம் - என்னைப்
பிரியா திருக்கும் பிரணவங் காப்பாம்
அராவணி வேணியன் காப்பாம் - எனக்
கருளை யளிக்குங் குருபரன் காப்பாம் (அத்து)

பஞ்சப் புலன்களுங் காப்பாம் - என்னைப்
பரவு மடியவ ரனுதினங் காப்பாம்
குஞ்சர முகத்தவன் காப்பாம் - நல்ல
குழந்தை வடிவேலன் என்றென்றுங் காப்பாம (அத்து)

சந்திர சூரியர் காப்பாம் - எங்குந்
தங்கு முயிர்க ளனைத்துமென் காப்பாம்
மந்திரந் தந்திரங் காப்பாம் - நான்கு
மறைகள் சிவாகமம் மாநிலங் காப்பாம் (அத்து)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீங்கா நினைவுகள்

உலகில் மனிதராக பிறத்தல் மிகவும் சிறப்புடையதாகும். அதிலும் அங்கவீனம் இன்றி பூரணமான லட்ஷணத்துடன் பிறவியெடுத்தால் அதுவே பெற்றோர் செய்த பெரும் புண்ணியம். இங்ஙனமே திரு. செ. முத்துக்குமாரசுவாமியும் அவர் துணைவியார் தெய்வநாயகியும் திருவருளாலும் , குரு அருளாலும் அனுசூயா, கௌரி என்னும் இரு பெண் மக்களையும் பெற்றெடுத்தனர். அவர்களிருவருக்கும் இளைய அன்புச்சகோதரனாகவும், தாய் தந்தையருக்கு அருமருந்தாக ஏகபுத்திரனாகவும் உதித்தவர் அமரர் யோககுமாரன்.

கைதடி ஊரில் மணியகாரர் வீடு என்றால் எவருக்கும் அன்பும் பயபக்தியுமான அன்ன சத்திரம் என்றால் மிகையாகாது. தெய்வ ஆராதனையும், யோகிகள், துறவியர், சித்தர்களை வணங்கி உபசரித்தல் போன்ற புண்ணியங்களுக்கு உறைவிடமாக இருந்தது. இந்தச் சூழலில் தான் கொழும்புத்துறை சிவயோகசுவாமிகளின் வழிவந்த மார்க்கண்டு சுவாமிகள், சோல்பரி சுவாமிகள் (லண்டன் சுவாமி) ஆகியோரின் ஆச்சிரமும் அமைந்துள்ளது. அருகில் கோவில் கொண்டெழுந்தருளி இருக்கும் வீரகத்திப்பிள்ளையார் இவர்களின் குலதெய்வமாகும். விநாயக விரத ஆராதனைகள், மகோற்சவத்தில் இரதோற்சவம் முதலியவற்றோடு ஆயக்கடவைப்பிள்ளையார் கோயில் முதலிய ஆலயங்களிலும் உபயக்கைங்கரியங்களை நிறைவேற்றி வைப்பார்கள். இவற்றோடு கொழும்புத்துறை சிவயோகசுவாமிகளின் ஆச்சிரமம் அவர் அருளாணையுடன் இயங்கும் சிவதொண்டன் நிலையம் ஆகியவற்றுக்கும் அங்கு நடக்கும் யாகங்களிலும், வழிபாடுகளிலும் இன்றியமையாது பணிபுரிந்து வந்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலண்டன் மாநகரில் சமூக, சமய சேவையிலீடுபட்டுக் கொண்டிருந்த வேளையில் மோட்டார் விபத்தில் இவர் பிரிய வேண்டிய துர்ப்பாக்கிய, துயரநிலை ஏற்பட்டது. பெற்றோர், சகோதரங்கள் குடும்பத்தார் மீளாத்துயரில் மூழ்கியுள்ளனர். ஏக புத்திரனாக வந்த அமரர் யோககுமாரனின் கடமைகளை, வழி வழியாக மூதாதையர் செய்த தருமப்பணிகளை யார் நடத்துவார்கள் என்று உற்றாரும் உறவினரும் ஏங்குகின்றனர். யோககுமாரன் சிறுபராயந் தொடங்கி சமய வாழ்விலும் சிறந்தவராகவும் சிவதீட்சை பெற்று விபூதிதாரணத்துடனும் காணப்படுவார். அடக்கமாகவும் அமைதியாகவும் பேசுவார். கருத்தாழமாகவும் பேசுவார். இலண்டன் நகருக்கு செல்லுமுன் தனது ஊருக்கு வந்து குருவை அஷ்டாங்கமாக விழுந்து வணங்கி வீபூதி பெற்று, ஆசிபெற்றுச் சென்றார். இக்காலத்தில் இப்படி நடப்பவர் அரிது. இவ்வாறு தமது குடும்ப பாரம்பரியத்தைப் பேணி வாழ்ந்தார். குருவின் ஆசிதான் பொய்த்ததோ. எல்லாம் எப்பவோ முடிந்தகாரியம் என்று விதியை நோக வேண்டியதாகின்றது. மனிதன் தன்நல் வினையால், தெய்வ குருபக்தியால், நன்மை பெற முயன்றாலும் ஏதோ ஒரு வழியாக ஊழ்வினை சூழ்ச்சி செய்து முன்னிற்கும் என்பது வள்ளுவன் வாக்கு. ஆனபடியால் யோககுமாரனின் பிரிவால் வாடி வருந்தும் அவர் குடும்பத்தார் வினையை வேரறுக்க வல்ல விநாயகரை, சிவயோகமுனி சொன்ன வகை "அழுது வாழ்த்தியு மேத்தியும் தொழுது கொள்வதாலென்ன சொல்லுவேன்" என்று தேற்றமடைவதே வழி.

"சிவயோக பிரஸ்திரஸ்து சுபமஸ்து"

ஆ.சந்திரசேகரக்குருக்கள்
வீரகத்திப்பிள்ளையார் கோவில்
கைதடி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இனிய பண்பினன்

அன்பிலார் எல்லாம் தமக்குரியர்; அன்புடையார்
என்பும் உரியர் பிறர்க்கு

என்ற வள்ளுவப் பெருந்தகையின் குறள்வாக்கிற்கு இலக்கணமாகத் தோன்றி அன்பு, கருணை, மாதா பிதா குரு தெய்வம் என்ற ஔவைப்பிராட்டியினது வாக்கிற்கு ஆதாரமாக எப்பொழுதும் அன்பாக இனிய வார்த்தை பேசிப் பழகிய, ஒருமலர் விநாயகப் பெருமானினது பாதக்கமலங்களைச் சென்றடைந்துவிட்டது.

யோககுமாரன் சிறு குழந்தையாக இருந்த காலத்திலிருந்து நான் அவரது அன்பையும், மேற்குறித்த விடயங்களையும் அவதானித்து, தன் வழி நின்று விநாயகர் ஆலயத்தொண்டிலும் சமூகப்பணிகளிலும் ஈடுபட்டு வாழ்வார் என எண்ணியிருந்தேன்.

யோககுமாரனுடைய குடும்பமே யோகர் சுவாமிகளின் அணுக்கத் தொண்டர்கள். யோகர் சுவாமிகளுடைய அடியொற்றி இவருக்கும் யோககுமாரன் எனப் பெயரிட்டனர். அதன் பயனாக இவர் வாழ்ந்த வதிவிடத்தில் மார்க்கண்டு சுவாமிகள், சோல்பரி சுவாமிகள் ஆகியோருக்குச் சிறு வயதில் பணிசெய்யும் அரும்பெரும் பாக்கியத்தையும் பெற்றார்.

ஆனால் காலன் யோககுமாரனின் கணக்கை முடித்துவிட்டான் என்ற செய்தியறிந்து, சைவப்பண்பாட்டுச் சூழலில் வாழ்ந்த இளந்தளிரான யோககுமாரை இழந்து தவிக்கின்ற குடும்பத்தினருக்கும் உற்றார் உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்வதுடன் இவரது ஆத்மா வீரகத்தி விநாயகரின் பாத கமலங்களைச் சேர்ந்து சாந்தி பெறப் பிரார்த்திக்கின்றேன்.

"நின் ஆத்மா பெறுக சாந்தி"

உற்றாரும் உறவினரும் நண்பர்களும் உன்நினைவை என்றும் போற்றிச் செல்வார்கள். கற்றோரும் மற்றோரும் போற்றிட நீ சேவை செய்தாய். கைதடியில் ஐங்கரனைப் பக்தி செய்தாய். கணத்திலே ஐங்கரனின் பாதம் சேர்ந்தாய். பெற்றிடுக நின் ஆத்மா முத்திப் பேறு.

கு. சிவஞானக்குருக்கள்
வீரகத்திப் பிள்ளையார் கோவில்
கைதடி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஏன் இந்த அவசரமோ ?.. எம் இனியவனே

அன்பிற்கு இனியனாக வாழ்ந்து அறம் பல செய்து, ஆற்றல் மிகுந்த வாலிபனாகத் துள்ளித் திரிந்து, இறைவன் தொண்டுசெய்து இதயம் மகிழ்ந்தாய். ஈசன் மைந்தன் கற்பக விநாயகர் பாதம் பணிந்து கல்வி கற்றாய். உலகம் போற்றும் உத்தமனாக வாழ்ந்தாய். ஊக்கம் நிறைந்த இளைஞனாகப் பொது சேவை செய்தாய். எல்லோர்க்கும் இளையவன் போல் பணிந்து பேசி புன்னகை செய்வாய். ஏங்க வைத்தாய், ஏன் இந்த அவசரமோ? எம் இனியவனே! ஐயன் பாதம் போற்றுகிறோம்; வந்து விடு எங்கள் முன்; ஒரு வார்த்தை கூறிவிடு என்றும் இனிக்கும் எம் நெஞ்சங்கள்.

ஓடம் போல் வாழ்க்கை என்பதை உணர்த்திவிட்டு எங்கு சென்றாய்? ஔடதம் போல் அனைத்து நெஞ்சிலும் வாழ்ந்து போனாய். தெய்வத்தின் செயலை நினைத்து அனைத்து உள்ளங்களும் அழுது நிற்கின்றன. கற்பக விநாயகரின் கருணை இதுவோ என்று கடிந்து மனம் நோகிறது. இனியவனே, உன் சந்திர வதனமும் புன்சிரிப்பும் கனிவான பார்வையும் இனிமையான சொல்லும் இனி எங்கு காண்போம். கதிரவன் போல் வந்து, காரியங்கள் பல செய்து, போதனைகள் பல கூறி கணப்பொழுதில் மறைந்து விட்டாய். என்றும் உன் ஆத்மா சாந்தி அடைய அன்னை நயினை நாகபூஷணியைப் பிரார்த்திக்கின்றேன்.

ஓம் சாந்தி

ஸ்ரீ கற்பக விநாயகர் ஆலயம்
இலண்டன்.

ஐ.வாமதேவக்குருக்கள்
நயினை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கற்பக விநாயகர் காலடியில் நின்றாய்...

ஆண்டவன் திருத்தொண்டு பெரிது என மகிழ்ந்து, ஆனந்தமான சேவை பல செய்து, ஆழ்ந்த அறிவினால் யோசனை பல சொல்லி, ஆலயத்தை உனது சொத்துப்போல் பாதுகாத்தாய். இன்னல் பல வந்தாலும் தயங்காது பொதுச்சேவை செய்தாய். இறைவன் ஏனோ உன்னை அழைத்து விட்டான். இதயம் தாங்கவில்லை. என் இளையவனே... இனிப் பாரினில் யார்தான் உன்னைப் போல் வருவார்? எங்கிருந்தாலும் யார் உன்னைப் போல் வாழமுடியும்? சிரித்தமுகம், செந்தளிப்பான சேவையும் பாரினில் எங்கு காண்போம். எம்மை துயரத்தில் ஆழ்த்தி விட்டு சென்று விட்டாய் இனியவனே! இனிப் பிறப்பில்லை உனக்கு. கற்பக விநாயகர் காலடியில் நின்றாய். அவன் பாதம் போற்றுகிறோம்.

ஓம் சாந்தி

ஆதித்தக்குருக்கள், பாலச்சந்திரக் குருக்கள்,
திவாகரக் குருக்கள்
இலண்டன் வால்தம்ஸ்ரோ ஸ்ரீ கற்பக விநாயகர் ஆலயம்.

## பிரிவின் துயரில்...

கற்பக விநாயகர் ஆலயத்தின் ஆரம்ப காலத்திலிருந்து 14.12.2003 வரை ஆலயம் சம்பந்தமான சமயப் பணிகளிலும் நிர்வாகப் பணிகளிலும் மிகவும் ஈடுபாட்டுடன் பணிகள் புரிந்து பலரது நம்பிக்கைக்கும் நன்மதிப்புக்கும் உரியவராகத் திகழ்ந்தவர். அவரது இழப்பினால் ஏற்பட்டுள்ள வெற்றிடம் என்னைப் பூதாகாரமாய்ப் பயப்படுத்துகின்றது. ஆலயத்தில் அர்ச்சகர்களும் நிர்வாகத்தினரும் பக்தர்களில் பெரும்பாலானோரும் அதிர்ச்சியாலும் சோகத்தினாலும் உறைந்து போயுள்ளனர். ஆலயம் தொடர்பாக ஏதாவது குறைகளை உணர்ந்தால் தனிமையில் என்னிடம் உரிமையுடன் சுட்டிக்காட்டி தேவையெனில் என்னிடம் வாதிட்டு விடயங்களைச் சரிப்படுத்திக் கொண்டிருந்த என் அருமைத் தம்பியை ஏன் பறித்தாய் என்று கற்பக விநாயகர் கழலடியில் கதறுவதைத் தவிர வேறு எதுவும் தோன்றவில்லை.

கோபாலகிருஷ்ணன்
தர்மகர்த்தா சபைத் தலைவர்
இலண்டன் கற்பக விநாயகர் ஆலயம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர் யோககுமாரனின் வாழ்வுப் பதிவுகள்

ஈழ மணித்திருநாட்டின் சிரசாக விளங்கும் யாழ்நகரின் தென்கிழக்கில் விளங்குவது கைதடி எனும் பழம் பதியாகும். அங்கு திரு. செல்லப்பா முத்துக்குமாரசுவாமி, திருமதி. முத்துக்குமாரசுவாமி தெய்வநாயகி ஆகியோரினது நல்லறமாகிய இல்லறத்தின் பயனால் 22.05.1974 ல் பிறந்த ஆண் மகவே யோககுமாரன். சிவயோகசுவாமிகளின் வழியை அடியொற்றி நின்ற தாய் தந்தையர், தங்கள் மகனுக்கும் சிவயோகசுவாமிகளின் திருநாமத்தின் வழிவந்ததாக யோககுமாரன் எனப் பெயர் சூட்டினர்.

யோககுமாரனின் பெற்றோரும் முன்னோரும் சிவயோகசுவாமிகளின் மிக நெருங்கிய அணுக்கத் தொண்டர்கள் ஆகிய காரணத்தால் 1950 ம் ஆண்டு யோகர்சுவாமிகளே தனது சீடரான மார்க்கண்டு சுவாமிகளை அழைத்து வந்து இவர்களுடைய வதிவிடம் அமைந்துள்ள காணியில் அமைக்கப்பட்ட ஆச்சிரமத்தில் அமர்த்தினர். அதனாற் போலும் மார்க்கண்டு சுவாமிகளுக்கு கைதடி மார்க்கண்டு சுவாமிகள் என்ற அடைமொழியும் ஏற்பட்டுள்ளது எனலாம். அவ்வாறு இருக்கையில் லண்டன் சோல்பரி பிரபுவின் மகனும யோகசுவாமிகளின் சீடரும், லண்டன் சுவாமிகள் என அழைக்கப்பட்ட சந்த சுவாமிகள் யோகர்சுவாமிகளின் ஆணைப்படி சில வருடங்கள் கைதடி மார்க்கண்டு சுவாமிகளின் ஆச்சிரமத்தில் தங்கி வாழ்ந்தார். அவ்வேளையில் அவ்விரு பெருமகான்களுக்கும் தொண்டு செய்யும் பாக்கியம் இளவயதிலேயே யோககுமாரனுக்குக் கிட்டியது தெய்வ அனுக்கிரகமே ஆகும். பின்பு இவர் கொழும்பில் வசித்து வந்த காலத்திலும் பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் நடைபெற்ற யோகர்சுவாமிகளின் ஆயிலியக் குருபூசைத் தினங்களுக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தவறாது சென்று தம்மாலான அருந்தொண்டுகளை ஆற்றுவார். இவர் தங்கள் குலதெய்வமாகிய கைதடி வீரகத்திப் பிள்ளையார் ஆலயத்திலும் மிகுந்த ஈடுபாடுகொண்டு தொண்டனாகவும் விளங்கினார்.

சிறு வயதிலேயே முறைப்படி சிவதீட்சை பெற்று அதற்குரிய அனுட்டானங்களை நாள்தோறும் செய்து வந்தார். பிறவிச் சைவரான யோககுமாரன் எந்தச் சந்தர்ப்பத்திலும் சமய அனுட்டானங்களைக் கடைப்பிடித்து ஒழுகத் தவறியதே இல்லை. மிக இளம் வயதிலேயே பெரியோரைக் கனம் பண்ணுதல், பிறருக்கு உதவி செய்தல், கோபம் கொள்ளாமை, கடவுள் மீது ஆழ்ந்த நம்பிக்கை, பொறுப்புணர்ச்சி, இன்சொல், மலர்ந்தமுகம், நட்புப் பாராட்டுதல் போன்ற நல்லியல்புகளைக் குறையாது கொண்ட குணக்குன்றாக விளங்கினார்.

தனது ஆரம்பக்கல்வியை யாழ். புனித பொஸ்கோ பாடசாலையிலும், யாழ் இந்து ஆரம்பபாடசாலையிலும் சிறப்புறக் கற்று உயர்கல்வியை யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியிலும், கொ/பம்பலப்பிட்டி இந்துக்கல்லூரியிலும் கற்றுத் தேறினார். யாழ் இந்துக்கல்லூரியில் கற்ற காலத்தில் சென்.ஜோன்ஸ் அம்புலன்ஸ் அமைப்பின் குழுத்தலைவராகவும், யாழ் இந்து இளைஞர் சங்கத்தின் உறுப்பினராகவும் சேவையாற்றினார்.

பேராதனைப் பல்கலைக்கழகத்தில் விவசாய விஞ்ஞானப் பீடத்திற்கு தெரிவான போதும் கணக்காளர் கற்கை நெறியில் நாட்டம் கொண்டு அதையே கற்றுவரத் தொடங்கினார். கணக்காளர் கல்வியை மேலும் தொடர்ந்து கற்பதற்காக 1999இல்இலண்டன் பயணமானார். அங்கு கற்றுக் கொண்டே BARNET SOLITAIRE PROPERTY MANAGEMENT நிறுவனத்தில் முகாமைத்துவக் கணக்காளராகச் சிறப்புறத் தொழில் புரிந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்தார். இயல்பாகவே விநாயகப் பெருமானில் கொண்டிருந்த பக்தி ஈடுபாட்டினால் இலண்டன் வோல்தம் ஸ்ரோவில் அமைந்துள்ள கற்பக விநாயகர் ஆலய இந்து இளைஞர் பேரவையில் இணைப்பாளராகச் சேவைபுரிந்தார். ஆலயத்தொண்டில் தன்னை மறந்த தூய்மையுடன் ஈடுபட்ட ஒருவருக்கு உதாரணம் காட்ட வேண்டுமெனில் அதற்கு யோககுமாரனே ஓர் உதாரணம் என்று அனைவராலும் அன்புடன் பாராட்டப்பெற்றார். அவ்வாலய அறங்காவலர்கள். சிவாச்சாரியார்கள், தொண்டர்கள், அடியார்கள் அனைவராலும் மிகுந்த அன்புடன் நேசிக்கப்பட்ட ஒருவர் என்றால் அவர் யோககுமாரன்தான். விநாயகப்பெருமானுடைய நாமங்கள் அவ்வாலயத்தில் எத்தனைமுறை ஒலிக்கிறதோ அந்தளவிற்க்கு யோககுமாரனின் நாமமும் ஒலித்தது என்றால் மிகையாகாது. பல சமூகப்பணிகளிலும் அங்கு ஈடுபட்டதோடு இலங்கையிலுள்ள அம்பாறை திருநாவுக்கரசர் இல்லம் போன்றவற்றுக்கு சிறுவர் கல்வித் திட்டத்திற்கான நிதிஉதவிகளைச் செய்து வந்ததோடு ஏனைய பொதுப்பணி மன்றங்களுக்கும் தன்னாலான உதவிகளைப் புரிந்து வந்தார். கற்பகவிநாயகர் ஆலயத்தில் ஞாயிற்றுக்கிழமைகளில் நற்சிந்தனை பாராயணம் நடைபெறுவதற்குரிய ஒழுங்குகளையும் செய்தவராவார். லண்டன் வோல்தம் ஸ்ரோ ஆலயத்தின் பணிகளை மேற்கொண்டிருந்த வேளையில் 14-12-2003 அன்று ஆயிலிய நட்சத்திரத்தில் கற்பகப் பிள்ளையாராலேயே ஆட்கொள்ளப்பட்டு அவரது பாதாரவிந்தங்களில் சேர்ந்து விட்டார்.

தமிழருவி த.சிவகுமாரன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Thamby Yogakumaran
# Legacy of his Life

*Those who do Sivathondu will be blessed with peace and patience.*

*Those who do Sivathondu will fathom threefold time.*

*Those who do Sivathondu will not suffer pain or sickness.*

*Those who do Sivathondu like gods will surely be.*

If one is to describe Yogakumaran's life in a few words, the above verse by the saint Sivayogaswamy comes to one's mind. Yogakumaran seemed to have realized at a very young age, that it is only through service to the god and the fellow human beings that one can see the truth and achieve salvation. This principle has been his guiding light through out his brief life of 29 years.

Love for all and humbleness had been the hallmark of Sivanadiyars (devotees of lord Siva) and Yogakumaran has possessed this in ample measure. Whether being a loving, caring, dutiful and obedient Son to his Parents, helpful Brother to his Sisters, a true friend to his innumerous friends, being respectful to the elders, a true *'Thondar'* to the Katpaga Vinayagar of Walthamstow (UK) , a social worker who had worked tirelessly in helping the needy or being an ever-smiling person who never showed his sorrow to anybody - he has demonstrated to us lesser human beings that how a human being should live his life.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

A significant trait of Yogakumaran was his ever-smiling face. He never showed his disappointments and tribulations to anybody. To put it in Ell Wheeler Wilcox's immortal words;

*"Laugh and the world laughs with you,*
*Weep and you weep alone:*
*For this brave old earth must borrow its mirth,*
*It has sorrow enough of its own."*

The Bible says, *"For everyone who makes themselves great will be humbled, and everyone who humbles himself will be made great"* (Luke 14:11) Yogakumaran was humble and down to earth to a point of fault and became a permanent fixture in the hearts of all who knew him.

Yogakumaran was born in to a prominent Saiva family in Kaithady, Jaffna. He was the only son of Mr. and Mrs. Muthukumaraswamy. His family is one of the prime trustees of Kaithady Veerakathi Pillair Kovil and is well respected by the people of Kaithady. Maniyakaran family has had the good fortune of being 'Anukka Thondars' of Sivayogaswamikal. Yogakumaran's grandfather and father came under the mystical influence of Yogaswamikal and closely served the Swamikal. Yogaswamikal had graced their house with his visits many a times. From 1950 onwards one of Yogaswamikal's disciples Markandu Swamikal lived a hermit's life in an ashram situated in Maniyakaran Valavu. Soulbury Swamikal, another disciple of Yogaswamikal, also dwelled

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

in the ashram for a brief period. This had given ample opportunities for Muthukumaraswamy's family to imbibe the spiritual essence of Saivaism.

As a result of close association with Swamikal and his devotees Manayakaran family became a well-cultured family. They were a close-knit family. Even though they had many tracts of lands, all the brothers and sisters chose to live in a parcel of land, which they called 'Manayakaran Valavu'. Being humble and respectful to all, being steadfast in adopting Hindu way of life, spending a greater part of their time in service to their family god 'Veerakarthi Pillaiyar' and to the followers of their guru Yogaswamikal were some of the distinct traits of this family. It is no surprise that Yogakumaran was born into such a spiritual family.

Yogakumaran was the youngest child and the only son to the Muthukumaraswamy family of three children. The parents had named him after their guru. The age difference between him and his immediate elder sister was 11 years. As he was the youngest child and born after a long gap, he was the cynosure of all the members in the family. He was affectionately called Thamby by everyone. Yogakumaran was given 'Siva Theetshai' at a young age. Siva Theetshai is a process of initiating a person to the Saiva way of life. Yogakumaran had steadfastly followed the tenets of Saivaism till he breathed his last. He had his primary education at J/Don Bosco Primary School



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

and went on to join Jaffna Hindu College where he studied until completing his O/Level. The ethnic imbroglio that had erupted in Jaffna had left his family with no option but to shift to Colombo. He did his A/Level at Bambalapitiya Hindu College, Colombo.

The education - both academic and non academic -that he had received at JHC must have reinforced in him the Hindu way of life. Yogakumaran's father had been a long-standing science teacher at Jaffna Hindu College and later went on to become its Vice Principal. He earned the respect and affection of his students by his quiet demeanour and was affectionately called 'Muthar'. Later this came to be the name by which Yogakumaran was called by his friends. Yogakumaran was an active member of the St. John's Ambulance while in school. He must have been a popular student as , upon hearing his demise, his ex-classmates had created a web site dedicated to his memory. Many of his friends all over the world had visited this website and left their condolence messages there.

Having completed his A/Level, he was selected to study B.Sc (Agriculture) at the University of Peradeniya. However, after having followed the course for a few months, he left the course as it had become apparent that his interest was becoming more and more focused on Accountancy. He started following CIMA in Colombo. During the period he followed his A/Level at Bambalapitiya



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Hindu College and later CIMA while working at KPMG Ford Rhodes, he lived with us in Wellawathe. He was very close to our children. It is no exaggeration to say that he was more concerned for his nephew and niece than us parents. When our daughter was a toddler of a few months, my wife had to go to The Netherlands to pursue her Masters Studies. During this period we have had the good fortune of having Yogakumaran along with my mother and mother-in-law to impart love and affection to the children. He will be sorely missed by all of his nephews and nieces.

After having completed the 3rd stage of CIMA, he made a sudden decision to go to England to pursue the final stage of CIMA. The parents reluctantly agreed to send to him to London. The parents and the family's loss was a great gain for the Hindu Tamil Community in England as he went on to distinguish himself as a social worker there. During his stay in Britain, he worked as a Management Accountant at Barnet Solitaire Ltd.

But his heart and soul were always with the Katpaga Vinayakar Temple of Walthamstow. He surrendered himself at the lotus feet of Katpaga Pillaiyar and spent his time worshipping the god and serving the temple. The trustee of the Temple says that ever since the inception of the temple, Yogakumaran was closely involved with all the religious and management activities of the temple. It was only while in service to the devotees of the temple



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

that he met with the fatal accident that claimed his life from this material world. He served as the Secretary of the "Inthu Illaignar Peravai" (Hindu Youth Society) of the Temple. During this period, through his gentle behaviour and humble demeanour, he managed to enlist many British Tamil Youth to participate in religious and social activities. He eagerly participated in various rehabilitation activities carried out by the youth society in the North East of our country. He was saddened by the destruction caused to the Tamil society and their culture in Sri Lanka and contributed generously towards helping the needy. In addition, he was closely associated with 'Murasam' - a British Tamil Information Directory. He was an active contributor to this directory.

He was well loved and respected by the Sri Lankan Tamil Hindu community in Britain, which was amply proved by the outpouring of emotion by them on hearing his demise. His friends and well wishers in London along with his dear cousins had worked tirelessly during the hour of grieve to clear the legal hurdles for sending him to Sri Lanka. His dear friends gave his beloved friend a fitting farewell by organizing a Memorial Service at William Morris Day Care Centre, Walthamstow and bore the material cost of sending him to Sri Lanka.

He lay in deep slumber at the Jayaratne Funeral Parlour for one day and the entire extended family, relatives and


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

friends were grief stricken. As for his parents - to put in the immortal words of Shakespeare 'Their heart was in the coffin there with Thamby, And they had to pause till it came back to them'. The funeral itself was well attended. Relatives and friends came up in numbers to pay their last respect to this wonderful human being.

Ever since I heard the news of his demise the following words of the Reluctant Messiah in Richard Bach's '*Illusions*' have been ringing in my ears. *"Here is a test to find whether your mission on earth is finished; If you're alive, it isn't"*. The message this verse gives us is that as long as you are alive you are supposed to work towards achieving your mission. Never relax. The same sentiment is expressed in Gita when Krishna says *"through selfless service, you will always be fruitful and find the fulfillment of your desires: This is the promise of the creator"*. (Gita 3:10).

Yogakumaran had come to this world for a specific mission, worked towards achieving his mission through out his brief life and left this world on completion of his mission.

May he find peace at the lotus feet of Pillaiyar.

By Ramanah Velupillai.

8, Deanstone Place,
Colombo -03.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தொண்டால் உயர்ந்தவர்

பின்னும் முன்னுமில்லைப் பிரமமே உள்ள பொருள்
என்னு மொழிதம் இதயத்தில் - மன்னுபவர்
சாந்தம் அடக்கம் தயவுடனே வாழ்ந்தினிது
சேர்ந்திடுவார் முத்தி நெறி.

சிவயோகசுவாமிகளின் நற்சிந்தனை

சிவயோகசுவாமிகள் மானிட உருத்தாங்கி மண்ணுலகில் வாழ்ந்த காலத்தில் அவருக்குத் தொண்டு செய்த பாக்கியவானும், நீண்டகால லண்டன் வாசியுமான கைதடியூர் சி.நாகராசா (பாரதீய வித்தியாபவன்) நான்கு வருடங்களுக்கு முன்னதாக ஓர் இளைஞனை சிவதொண்டன் நிலையம் (UK) என்ற இலண்டன் அமைப்பின் வழிபாட்டுக் கூடத்திற்கு அழைத்து வந்தார். அவர் தான் என் போன்றவர்களின் இதயத்தில் அன்புருவாக நிலைத்துள்ள யோககுமாரன் அவர்கள்.

சிவயோக சுவாமிகளுக்கும் மார்க்கண்டு சுவாமிகளுக்கும் தொண்டுகளாற்றி வந்த சிறப்பிற்குரிய குடும்பத்தின் வாரிசு என்ற வகையில் யோககுமாரன் மீது எனக்கு அன்பும் வணக்கத்திற்குரிய மதிப்பும் எப்போதும் இருந்து வந்தது.

சிவயோகசுவாமிகளின் நற்சிந்தனையில் ஒரு சிவதொண்டன் எப்படிப்பட்டவனாக இருக்க வேண்டும் என்ற போதனைகளில் பல யோககுமாரனுக்கு வெகுவாக பொருந்துகின்றன. அன்னார் தேகவியோகமான 14.12.2003 ஞயிற்றுக்கிழமை கூட சிவயோகசுவாமிகளின் குருபூசை தினமான ஆயிலியத் திருநாள் என்ற பொருத்தத்தையும் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

13.12.2003 அன்று மாலை கற்பக விநாயக பெருமானின் இலட்சார்ச்சனை செய்த ஐந்து சிவாச்சாரியர்களினது தட்டுகளிலும் அறுகம்புல்லை தனியொரு தொண்டனாக நின்று தொடர்ச்சியாக நிறைத்துக் கொண்டிருந்த திருத்தொண்டும், அன்றைய இரவு 10 மணியில் இருந்து கம்பவாரிதி ஜெயராஜ் அவர்களையும் இன்னும் சில அடியார்களையும் அவர்களது இருப்பிடங்கள் சேர தன் காரில் ஏற்றிச் சேர்ப்பித்த சிவசேவையின் போது யாருமே எதிர் பாராவண்ணம் ஏற்பட்ட விபத்தினால் யோககுமாரனின் மானிட வாழ்வு முற்றுப்பெற்றதும் இன்று மட்டுமல்ல என்றும் என் போன்றோரின் உள்ளத்தில் நிலைத்த பதிவுகளே.

யோககுமாரனின் பிரிவில் துயருறும்
சிவயோகசுவாமிகள் பக்தர்கள் சார்பில்
இ. முருகானந்தன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதிர்ந்துபோன இந்துவின் உயிர்ப்பூ

நண்பா! நினைத்துப் பார்க்கிறோம் உன்னை
உன் புன்சிரிப்பை
தந்தை வழிவந்த உன் தயவு நிறைந்த பண்பை

எல்லாமே தவிடு பொடியாகவென வந்ததே
அந்த மரணச்செய்தி
எப்படி நம்புவது ?

நேற்று அந்த பழைய மாணவர் சங்க விழாவில்
முந்தநாள் முத்தமிழ் விழாவில்
அதற்கு முதல்
யாழ் இந்துக் கல்லூரியின் வகுப்பறைகளில் எல்லாம்
பூரண சந்திரனாய் பிரகாசித்த
உன் பால்வடியும் சிரித்த முகம்
இன்று? எப்படி...?
ஒரு சோகச் செய்தியாகி
எம் செவிவழி புகுந்ததை
எப்படி நம்புவது ?
முத்தா...
இப்படித்தான் உன்னை நாங்கள் எல்லோரும்
செல்லமாக அழைப்போம்.
கல்லூரி மாணவனாக
கணக்காளனாக
சமூக சேவகனாக
சமயத்தொண்டனாக
விரிந்த உன் ஆளுமை முழுமை பெறுமென
காத்திருந்த உறவுகட்கு
கண்ணீரை நிறைத்த
அந்தக் "கார் விபத்து"

உன் உயிர்ப் பூவை
பறித்த செய்தி கேட்டு
பதறிப் போனோம்
உன்னை நினைத்து
விதியை நொந்து
விழிகள் நனைந்து
உனது ஆன்ம சாந்திக்காய்
பிரார்த்திக்கிறோம்!

உலகெங்கிலுமிருந்து
யாழ். இந்துவின் மைந்தர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவிலல்

எமது குடும்பச் செல்வம், எங்கள் அன்பு மைந்தன் யோககுமாரன், இலண்டன் ஸ்ரீ கற்பக விநாயகருடன் இரண்டறக் கலந்த செய்தி கேள்வியுற்று, கலங்கி நின்றும், கடமை தவறாது உற்ற நண்பனுக்குத் தக்க வேளையிலே, உறுதுணையாயிருந்து உதவிகள் பல புரிந்த யோககுமாரனின் ஆருயிர் நண்பர்களுக்கும், ஸ்ரீ கற்பக விநாயக ஆலயத்தைச் சார்ந்த தொண்டர்கள் சிவாச்சாரியார்கள், தர்மகர்த்தா சபையினர், இந்து இளைஞர் பேரவைத் தொண்டர்கள் இலண்டன் ஈலிங் கனக துர்க்கையம்மன் ஆலயத் தொண்டர்களுக்கும், அறங்காவலர் சபையினர்க்கும் மற்றும் நேரிலும், தொலைநகல், தொலைபேசி, கணனி தகவல் மூலமும் ஆறுதல் கூறியோர்க்கும், மலர் வளையம் மற்றும் மலர் மாலை சாத்தியோர்க்கும் நேரில் வந்து ஆத்மசாந்திப் பிரார்த்தனைகளிலும் கலந்து கொண்ட உற்றார், உறவினர் நண்பர்கள் யாவருக்கும் எம் இதய பூர்வ நன்றிகள்.

குடும்பத்தினர்.

29/1 பசல்ஸ் லேன், கொழும்பு 06

OUR SINCERE THANKS to....

The family members of late Mr. Muthukumaraswamy Yogakumarn express their sincere gratitude to -

Friends, Relatives, Devotees & Trustees of London Sri Katpaga Vinayagar Temple;
Devotees & Trustees of London Ealing Kanaga Thurkkai Amman Temple;
Others who attended the viewing in London on 17.12.2003 and viewing on 20.12.2003 & Funeral Service on 21.12.2003 at Jeyaratne Parlour, Colombo-08
Friends & Relatives who called at their residence; and offered Floral Tributes ; sent messages of Condolence and assisted in numerous ways at the most difficult time.

Family Members.

29/1 Fussels Lane, Colombo -06
27.01.2004



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தையல்நாயகித் தாயே


இது நல்ல தருணம் அம்மா

வையம் புகழும் வண்ணை மாநகரில்

வாழும் வாணியே சிவகாமியே

கந்தசாமியை தந்த

தையல்நாயகித் தாயே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*Jet Printings, Colombo-06. Tel. 2364568*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org